முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

171—

கால்நடை மருந்தகம்

***3959—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, குறிச்சி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

குறிச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு கால்நடை மருந்தகம் அமைக்கப்படுமா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு விதிகளின்படி அங்கே 3 ஆயிரம் கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். ஆனால், அந்தக் கிராமத்திலே 1,033 அலகுதான் இருக்கின்றன. எனவே, அங்கே கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி ஊராட்சி. தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட திருப்பனந்தாள் ஒன்றியத்தில் உள்ளது. அந்தக் குறிச்சி ஊராட்சியை சுற்றியிருக்கக்கூடிய ஆரலூர், கொண்டசமுத்திரம், சிக்கல் நாயக்கன்பேட்டை, அத்திப்பாக்கம், சிதம்பரநாதபுரம், முக்கரை, மேலக்காட்டூர் ஆகிய ஊராட்சிகளில் 60—க்கும் மேற்பட்ட விவசாய*

கிராமங்கள் இருக்கின்றன. விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய கால்நடைகளையும் பெரிய அளவில் பாதுகாக்க வேண்டிய கடமை விவசாயிகளுக்கு இருக்கிறது. இந்த 60 கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு நோய் என்றால் பந்தநல்லூர் அல்லது திருப்பனந்தாள் போக வேண்டிய இடர்பாடு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிச்சியிலே கால்நடை மருந்தகம் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன். அதற்குரிய இடமும் குறிச்சி ஊராட்சியில் இருக்கிறது. நிதி இடர்பாடு ஏற்படும் என்று அரசு கருதினால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டடம் கட்டுவதற்கு நிதியையும் ஒதுக்கித் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, குறிச்சியிலே கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திலே, குறிச்சி கிராமத்திற்கு அருகிலேயே திருப்பனந்தாள் கிராமத்திலே ஒரு கால்நடை மருந்தகமும், பந்தநல்லூர் கிராமத்திலே ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொள்வதற்கிணங்க அந்தப் பகுதியிலே வருங்காலத்திலே கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாகின்ற வாய்ப்புகள் இருக்கின்றன. ஏனென்று சொன்னால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழையிலும் ஏழைகளான குடும்பங்கள் எல்லாம் பொருளாதாரத்திலே முன்னுக்கு வர வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விலையில்லா பசுக்களையும், ஆடுகளையும் வழங்கி வருகிறது. அந்த அடிப்படையிலே அங்கே கால்நடைகளின் எண்ணிக்கை உயருகின்ற நிலை உள்ளது. வாயில்லா ஜீவன்களையும் வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக அவருடைய கோரிக்கையை பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலித்து குறிச்சியிலே கால்நடை மருந்தகம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வெப்பம் மிகுந்த கோடை காலத்தில் கால்நடைகளை பராமரிக்க நடமாடும் கால்நடை மருத்துவ நிலையத்தை குறிச்சியிலே அதிக நாள் முகாமிடவைத்து அந்தக் கால்நடைகளைப் பாதுகாக்க அரசு முன்வருமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்டத்திற்கு ஒன்று என்று நடமாடும் கால்நடை மருத்துவமனை இயங்கி வருகிறது. அதன்மூலமாக உறுப்பினர் குறிப்பிடுகின்ற குறிச்சி மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்கு மருத்துவம் அளிக்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

172—

காகித ஆலை

***20087**—**திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, பெரியசெவலை கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வளாகத்தினுள் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தும் வகையில் காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?